ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**1. ஓங்காரக்குடிலில் தொடர்ந்து ஜோதி வழிபாடு, ஜீவசமாதி வழிபாடு, ஆசான் தவஅறை வழிபாடு, நித்திய அன்னதானம் மற்றும் தர்மகாரியங்கள் செய்வதற்கு ஆசியும் அறிவுரையும் வேண்டுகிறோம்.**

**2. மேற்கண்ட செயல்கள் செய்ய தொண்டர்கள் அன்பர்கள் முழு உணர்வோடு செயல்பட ஆசி அறிவுரை வேண்டுகிறோம்.**

**குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர் அருளிய அருட்சுவடி**

**23.05.2024**

1. சுப்பிரமணியர் யானும் உலகமெல்லாம்
சூட்சுமமாக சரவண ஜோதி வழிபாடாய்
ஒப்புக் கொண்டு உலகோரால் ஏற்கப்படவே
ஓங்கார ஞானி ஆறுமுக அரங்கன் யான்

2. யானே இந்த கலியில் அவதாரமெடுத்து
உண்மைபட அன்பர்கட்கு இந்த வழிபாட்டை
ஓங்காரம்பட ஓங்காரக்குடில் படைத்து
உயர்வாக ஞானம் அருளி வந்த

3. ஆறுமுக அரங்கன் யானும்
யானுமே இன்று முருகப்பெருமானோடு
உயர்வான சரவண ஜோதியில் கலந்து
வகைபட அன்பர்கட்கு அருட்சுவடியாக

4. ஆற்றலாக இறங்கி அருளாசி வழங்குகின்றேன்
வழங்கவே அகத்தியர் சன்மார்க்க சங்க
வல்லமை கொண்ட ஓங்காரக்குடிலின்
என் சீடர் மக்கள் சேய்களெல்லாம் விரும்பி கேட்க

5. இன்னவர்கள் விரும்புகின்ற வண்ணம்
வகைபட ஓங்காரக்குடிலில்
உயர்வாக தொடர்ந்து இனி வருங்காலம்
அரங்கன் யான் நிர்வகித்த வண்ணம்

6. இனிதே சரவண ஜோதி வழிபாடும்
இதனோடு ஜீவசமாதி வழிபாடு என் தடத்தில்
இதனோடு அரங்கன் என் தவ அறையும்
கோட்டமாக சக்தி மிகுந்த தடமாக மாற்றி

7. இவ்வெல்லையிலும் வழிபாடும் இதனோடு தொடர்ந்து
தர்மகாரியங்களும் யான் விதித்த வண்ணம்
ஜீவதயவை காக்கின்ற உயர்வான
வழிபாட்டு முறைகளும் அன்னதான பணிகளும்

8. தடையற தொடர்ந்து நடக்க
அரங்கன் யான் இன்று அன்பர்கள்
வேண்ட அருளாசி தருகின்றேன்
தருகவே தவராஜன் யான்

9. தக்கபடி பெருந்துணையாய் நின்று
அன்பர்கட்கு ஆற்றலாக அவர்களுள்
கலந்து இயங்குகின்றேன் அன்னதனால்
என் சீடர் பெருமக்கள் யாவரும்

10. எந்த சூழலிலும் வழிதவறி செல்லமாட்டார்கள்
என் ஆசி பெற்ற தொண்டர் பெருமக்கள் யாவரும்
சன்மார்க்க சங்கத்தின் கொள்கை விட்டு
எக்காலமும் அகல மாட்டார்கள்

11. அன்னதனால் இவர்கள் மேலும்
கட்டுக்கோப்பாய் அரங்கன் யான் விதித்த
வழிமுறைகளை ஏற்று இன்பமுற தொடர்ந்து
இன்னும் ஓங்காரத் தொடர்பில்

12. ஓங்காரக்குடிலின் தொடர்போடு உயர்வாக சிறக்க
அச்சமற ஜோதி வழிபாட்டோடு
ஜீவசமாதி என் தட வழிபாடும்
அரங்கன் யான் சூட்சுமமாய் இருக்கின்ற

13. என் தவ அறை வழிபாடும்
இதனோடு தர்மகாரிய பணியும்
நித்திய அன்னதானமும் தொடர் சேவைகளும்
தடையற நடந்தேற அரங்கன்

14. என் பாதுகாப்பும் அனுமதியும்
பரிபூரண ஆசியும் உண்டு உண்டு
உயர்வுபட இந்த வழிபாட்டை
உகந்தபடி தொண்டர் பெருமக்கள்

15. இன்பமுற கலந்து ஏற்று தொடர்ந்து
வழிபாடாக நித்திய வழிபாட்டோடு
தடையற முழுமதி பூஜை வழிபாடு
தக்கபடி அரங்கன் யான் சித்தி கண்ட

16. பூச ஆயில்ய மகம் ஜீவசமாதி நிலை
கண்ட இந்த தினங்களெல்லாம்
எந்தனுக்கு உண்டான குரு பூஜையாகவும் ஏற்று
மாதாந்திர பூஜை வழிபாடும்

17. மகத்துவம் பட தொடர்ந்து செய்ய
தொண்டர்கட்கு அரங்கன் என் அனுமதியும்
ஆசியும் உண்டு உண்டு
உயர்வாக இந்தவித வழிபாடு பெருக பெருக

18. ஓங்காரக்குடிலில் தர்மகாரியங்களும் விரிந்தோங்கி
உயர்வுபட இதற்குண்டான பொருள் வளமும் கூடி
வகைபட எல்லா காரியங்களும்
வருவோர்க்கு சித்தியாகி அவரவர்க்கு வரமாக

19. அரங்கன் யான் அவர்கள் வேண்டலை
பூர்த்தி செய்து ஆற்றல்பட சூட்சும குருவாய் இருந்து
சகல காரண காரிய சர்வ காரியங்களும் வெற்றி தந்து
அருள்புரிவேன் அரங்கன் யான் அருளிய ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–